**SNS academy**
a fingerprint school
*Sincerity, Nobility and Service*

**TERMENAL EXAM - 1**
**TAMIL (II LANG)**

**Class: 7** **Max Marks: 80**
**Date: 20.9.19** **Time: 3 hrs**

**பகுதி – அ (படித்தல்)**

**1. பின்வரும் பத்தியைப் படித்துப் பல்விடை வினாக்களுக்கு விடை தருக. (5)**

களஞ்சியம் என்பது தானியங்களைச் சேகரித்து வைக்கும் இடமாகும். குழந்தைகள் கலைக் களஞ்சியம் என்பது குழந்தைகளுக்குத் தேவையான பல்வேறு செய்திகளை ஒருங்கே சேர்த்து வைத்துள்ள நூலாகும். கலைக் களஞ்சியத்தைப் பயன்படுத்துவதால் குழந்தைகள் விரைவான அறிவு வளர்ச்சியையும், மொழி வளர்ச்சியையும் அடைவர். இக்கலைக் களஞ்சியம் குழந்தைகள் தாமே படித்து புரிந்து கொள்ளும் வகையில் எளிமையாக அமைந்திருக்கும். அது பத்துத் தொகுதிகளைக் கொண்டுள்ளது. பத்தாவது தொகுதியின் இறுதியில் சொற்களின் அகரவரிசைப் பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கும்.

**வினாக்கள்**

i. களஞ்சியம் எனப்படுவது யாது?
அ) தானியங்களைச் சேகரித்தல்
ஆ) உடைகளைச் சேகரித்தல்
இ) புத்தகங்களைச் சேகரித்தல்
ஈ) செல்வம் சேகரித்தல்

ii. குழந்தைகள் கலைக் களஞ்சியம் ---- வகையில் அமைந்திருக்கும்.
அ) எளிமையாக ஆ) அதிகமாக
இ) குறைவாக ஈ) சிறியதாக

iii. குழந்தைகள் கலைக் களஞ்சியம் எத்தனைத் தொகுதிகளைக் கொண்டது.
அ) எட்டு ஆ) ஒன்பது இ) பத்து ஈ) ஆறு

iv. பத்தாவது தொகுதியின் இறுதியில் ------ கொடுக்கப்பட்டிருக்கும்.
அ) எகர வரிசைப் பட்டியல்
ஆ) அகர வரிசைப் பட்டியல்
இ) இகர வரிசைப் பட்டியல்
ஈ) உகர வரிசைப் பட்டியல்

v. குழந்தைகள் கலைக் களஞ்சியத்தைப் பயன் படுத்துவதால் ____________ அடைவர்.
அ) அறிவு வளர்ச்சி ஆ) உடல் வளர்ச்சி
இ) மொழி வளர்ச்சி ஈ) உள்ள வளர்ச்சி

**2. பின்வரும் பத்தியைப் படித்துப் பல்விடை வினாக்களுக்கு விடை தருக. (5)**

மருத்துவத் தொழிலுக்கு பாம்பின் நஞ்சு மிக இன்றியமையாததாகும். இது பொன்னை விட மேன்மையானது. 140 கிராம் நஞ்சை எடுப்பதற்கு 20 ஆயிரம் பாம்புகள் தேவைப்படுகின்றன. பாம்பின் பல்லிலிருந்து நஞ்சைப் பிழிந்தெடுக்கின்றனர். இரஷ்யாவில் ஒரு கிராம் நஞ்சின் விலை 1400 ரூபிள். ஆனால் தங்கத்தின் விலையோ கிராமிற்கு மூன்று முதல் எட்டு ரூபிள் வரைதான். இதன் மூலம் பாம்பு நஞ்சின் மதிப்பு தெரியும். பாம்பிலிருந்து எடுக்கப்படும் நஞ்சு கால்சியம் குளோரைடில் வைக்கப்படுகிறது. அது நீரை உறிஞ்சியபின் படிகங்களாக மருந்தாலைகளுக்கு அனுப்பப்படுகிறது. பாம்பு நஞ்சு தசை வலிகளையும் நரம்புக் கோளாறுகளையும் குணப்படுத்துகிறது. கேன்சர் நோய்க்கும் பாம்பின் நஞ்சு மருந்தாகப் பயன்படுகிறது.

**<u>வினாக்கள் :</u>**

i. தங்கத்தை விடச் சிறந்தது .....................
அ) வைரம் ஆ) பிளாட்டினம்
இ) கால்சியம் ஈ) பாம்பின் நஞ்சு

ii. ஒரு கிராம் நஞ்சின் விலை 1400 ரூபிள் என விற்கப்படும் நாடு ......
அ) இந்தியா ஆ) ஜப்பான் இ) இரஷ்யா ஈ) இந்தோனேசியா

iii. பாம்பிலிருந்து எடுக்கப்படும் நஞ்சு எதில் வைக்கப்படுகிறது?
அ) குளோரைடு கால்சியமில்
ஆ) குளோரைடில்
இ) கால்சியம்
ஈ) கால்சியம் குளோரைடில்

iv. பாம்பிலிருந்து எடுக்கப்படும் நஞ்சு எவ்வாறு மருந்தாலைகளுக்கு அனுப்பப்படுகிறது ?
அ) படிகங்களாக
ஆ) கற்களாக
இ) நீரை உறிஞ்சியபின்
ஈ) நீரை உறிஞ்சியபின் படிகங்களாக

v. பாம்பின் நஞ்சு எந்த நோயைப் குணமாக்க உதவுகிறது?
அ) மலேரியா ஆ) காய்ச்சல்
இ) மஞ்சள் காமாலை ஈ) புற்று நோய்

**3. மூன்றில் ஒரு பங்காக சுருக்கி எழுதுக (5)**

உலகிலேயே மிகவும் அற்புதமான, நம்ப முடியாத சாதனை செய்பவர்கள் யார்? எப்போதும் நம்பிக்கை குறையாமல் வாழ்கிறவர்கள் எவரோ, அவர்கள்தாம். மாற்றுத்திறனாளியரிடம் இத்தகைய நம்பிக்கையை அதிகமாகவே காணலாம். அருஞ்சாதனை புரிந்த தாமசு ஆல்வா எடிசன், கெலன் கெல்லர், பீத்தோவன், மைக்கேல் பாரடே, சான்சன் முதலானோர் மாற்றுத்திறனாளியரே. தன்னம்பிக்கை ஒன்றனையே இவர்கள் தம் வாழ்வில் குறிக்கோளாகக் கொண்டார்கள். நான்கு வயதில் ஏற்பட்ட நிமோனியா காய்ச்சினால், இனி நடக்கவே முடியாது என மருத்துவரால் கூறப்பட்ட வில்மா ருடால்ப் என்னும் பெண்மணி, தன்னம்பிக்கையையும் விடாமுயற்சியையும் கைவிடவில்லை. இடைவிடாத பயிற்சியும் துணிவும் கொண்டு விளங்கிய வில்மா, பதின்மூன்று வயதில் ஓட்டப்போட்டிகளில் கலந்து கொண்டாள். 1960ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் பங்கு பெற்ற வில்மா ஒரே ஒலிம்பிக் போட்டியில் மூன்று தங்கங்களை வென்ற பெண்மணி எனப் பாராட்டப்பெற்றார். நம்பிக்கைதான் வாழ்வின் உயிர் நாடி. நம்பிக்கை இருந்தால் நம் விதியைக் கூட மாற்றிச் சாதனை படைக்கலாம்.

**பகுதி – ஆ (எழுதுதல்)**

**4**. உமது ஊரில் அமைந்துள்ள சிறுவர் பூங்காவைச் சீரமைத்துத் தருமாறு வேண்டி மாவட்ட ஆட்சியருக்கு ஒரு விண்ணப்பம் வரைக 6

**(அல்லது)**

உமது பள்ளியில் நடைபெற்ற “சுதந்திர தின விழா” குறித்து உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

**கடிதத்தில் உனது பெயரும், முகவரியும்:** அருணன்/அருணா, எண்.3, கம்பர் தெரு, மதுரை-2 எனக் கொள்க.

**5. பின்வரும் பகுதிகளில் ஏதேனும் ஒன்றில் கொடுக்கப் பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக. 8**

i. நீரின்றி வாழ்வில்லை – நீர்நிலைகள் – மழைநீர் – மரம் வளர்த்தல் – நீரைச்சேமித்தல் – முடிவுரை.

**ii.** வாழ்வாதாரம் செல்வம் – செல்வத்தின் சிறப்பு – சிக்கனம் – சேமித்தல் – சேமிக்கும் வழிகள் – முடிவுரை.

**iii.** முன்னுரை – அறிவியலும் வாழ்க்கையும் – வாழ்க்கைக்குத் தேவை – அறிவியல் வளர்ச்சிப் பாதை – நன்மை தீமை - முடிவுரை

## பகுதி இ (இலக்கணம்)

**6. சான்று தருக. (3)**

i. குறுகிய ஓசையில் ஒலிக்கும் உகரம்
அ) குற்றியலிகரம் ஆ) குற்றியலுகரம்
இ) முற்றியலுகரம் ஈ) ஆய்தம்

ii. சொல்லின் முதலில் மட்டுமே வருவது
அ) ஐகாரக்குறுக்கம் ஆ) ஔகாரக்குறுக்கம்
இ) மகரக்குறுக்கம் ஈ) ஆய்தக்குறுக்கம்

iii. இலக்கணப் போலி
அ) புறநகர் ஆ) நகர்புறம்
இ) கோவை ஈ) இறைவனடி சேர்ந்தார்

**7. நிரப்புக. (3)**

i. குற்றியலுகரத்தின் மாத்திரை அளவு ________
அ) ஒன்று ஆ) இரண்டு இ) அரை ஈ) கால்

ii. குறுக்கங்கள் ___________ வகைப்படும்.
அ) எட்டு ஆ) மூன்று இ) ஆறு ஈ) நான்கு

iii. முன்னோர்கள் சொன்னவற்றை அப்படியே வழங்கி வருவது ______.
அ) வழக்கு ஆ) உறவு இ) இயல்பு ஈ) ஆய்தம்

**8. கூறியவாறு செய்க. (3)**

i. படு (குற்றியலுகரமாக்குக)
அ) பாடு ஆ) படி இ) கொடு ஈ) பாடி

ii. அமைச்சு (வகையறிக)
அ) முதற்போலி ஆ) இடைப்போலி
இ) கடைப்போலி ஈ) முற்றுப்போலி

iii. பீலி (இயற்சொல்லாக்குக)
அ) மயிலிறகு ஆ) நகம் இ) பசு ஈ) கிணறு

**9. இலக்கணகுறிப்பு தருக. (3)**

i. எஃகு
அ) உயிர்த்தொடர் குற்றியலுகரம்
ஆ) ஆய்தத்தொடர் குற்றியலுகரம்
இ) வன்தொடர் குற்றியலுகரம்
ஈ) இடைத்தொடர் குற்றியலுகரம்

ii. நெடில் எழுத்துகள்
அ) க்,ச்,ட்,த்,ப்,ற் ஆ) அ,இ,உ,எ,ஒ
இ) ஆ,ஈ,ஊ,ஏ.ஐ,ஓ,ஔ ஈ) ய்,ர்,ல்,வ்,ழ்,ல்

iii. கால்கழுவி வந்தான்
அ) இடக்கரடக்கல் ஆ) குழூஉக்குறி
இ) மங்கலம் ஈ) மரூஉ

**10. சரியான சொற்றொடரை தேர்ந்தெடுத்து எழுதுக. (3)**

i. தமிழ் இலக்கணம் பத்து வகைப்படும்.
தமிழ் இலக்கணம் ஆறு வகைப்படும்.
தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும்.
தமிழ் இலக்கணம் ஏழு வகைப்படும்.

ii. சொல் நான்கு வகைப்படும்
சொல் ஐந்து வகைப்படும்
சொல் ஆறு வகைப்படும்
சொல் பத்து வகைப்படும்

iii. எழுத்துகள் ஒலிக்கும் கால அளவு நீளம் எனப்படும்.
எழுத்துகள் ஒலிக்கும் கால அளவு சொல் எனப்படும்.
எழுத்துகள் ஒலிக்கும் கால அளவு மாத்திரை எனப்படும்.
எழுத்துகள் ஒலிக்கும் கால அளவு அளபெடை எனப்படும்.

## பகுதி ஈ (இலக்கியம்)

**11. பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக. (5)**

யானைகள் எப்பொழுதும் கூட்டமாகத் தான் வாழும். அந்தக் கூட்டத்திற்கு ஒரு பெண் யானைதான் தலைமை தாங்கும். யானைகள் தங்களுக்குத் தேவையான உணவு, தண்ணீர் ஆகியவற்றிற்காக இடம் பெயர்ந்து கொண்டே இருக்கும். ஒரு யானை நாள் ஒன்றுக்கு 250 கிலோ புல், இலை தழைகளை உணவாக உட்கொள்ளும். அதற்குக் குடிக்க அறுபத்தைந்து லிட்டர் தண்ணீர் தேவைப்படும். யானை மிகுந்த நினைவாற்றல் கொண்ட விலங்கு.

**வினாக்கள்**

i. யானைக் கூட்டத்திற்கு தலைமை தாங்குவது எது?
ii. யானை ஒரு நாளுக்கு எவ்வளவு உணவு உண்ணும்?
iii. நினைவாற்றல் மிக்க விலங்கு எது?
iv. யானைகள் ஏன் இடம்பெயர்கின்றன?
v. பத்திக்கு ஏற்ற தலைப்பை எழுதுக.

**12. பின்வரும் பாடலைப் படித்துப் பல்விடை வினாக்களுக்கு விடை தருக. (4)**

சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டு உளனோ எனவினவுதி என்மகன்
யாண்டுஉளன் ஆயினும் அறியேன் ஓரும்
புலிசேர்ந்து போகிய கல்அளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே.

**வினாக்கள்**

i. இப்பாடல் இடம் பெற்ற நூல் ____________.
அ) திருக்குறள் ஆ) புற நானூறு
இ) அகநானூறு ஈ) நாலடியார்

ii. பாடலின் ஆசிரியர் யார்?
அ) ஔவையார் ஆ) அதியமான்
இ) காவற்பெண்டு ஈ) கபிலர்

iii. யாண்டுளனோ – பிரித்து எழுதுக.
அ) யாண்டு + உளனோ ஆ) யாண் + உளனோ
இ) யா + உளனோ ஈ) யாண்டு + உனோ

iv. மகன் எங்குள்ளான்?
அ) வீட்டில் ஆ) பள்ளியில்
இ) போர்களத்தில் ஈ) வீதியில்

**13. விடுபட்ட சீர்களை எழுதுக. 2**

i. தன்நெஞ்சு அறிவது ________ பொய்த்தபின்
தன்நெஞ்சே _____________ சுடும்.

ii. அவ்விய _________ ஆக்கமும் செவ்வியான்
______________ நினைக்கப் படும்.

**14. எவையேனும் இரண்டு செய்யுள் வினாக்களுக்கு விடை தருக. 8**

i. எங்கள் தமிழ் பாடலில் கவிஞர் கூறும் கருத்துகள் யாவை?
ii. காடு பாடலில் விலங்குகளின் செயல்களாகக் கவிஞர் கூறுவனவற்றை எழுதுக.
iii. கடலில் கப்பல் செல்லும் காட்சியை அகநானூறு எவ்வாறு விளக்குகிறது?
iv. பாஞ்சாலங்குறிச்சியின் வீரத்தினை விளக்கும் நிகழ்வுகள் யாவை?

**15. எவையேனும் இரண்டு உரைநடை வினாக்களுக்கு விடை தருக.10**

i. கிளை மொழிகள் எவ்வாறு உருவாகின்றன?
ii. புலிகளின் வாழ்க்கைப் பற்றி  எழுதுக.
iii. கப்பல் பாதுகாப்பானதாக அமையத் தமிழர்கள் கையாண்ட வழிமுறைகள் யாவை?
iv. முத்துராமலிங்கரின் பல்துறை ஆற்றல் குறித்து எழுதுக..

**16. ஏதேனும் ஒரு தலைப்பில் துணைப்பாடக் கட்டுரை எழுதுக. 7**

i. இந்திய வனமகன் குறித்து எழுதுக.
ii. ஆழ்கடலின் அடியில் கதையை சுருக்கி எழுதுக.
iii. கப்பலோட்டிய தமிழர் குறித்து கட்டுரை எழுதுக.